சார்பு நீதிமன்றம், அருப்புக்கோட்டை.

OS No.110/2011

2026ம் ஆண்டு மார்ச் திங்கள் 12-ம் நாள் வாதி சாட்சியின் வாக்குமூலம் (1889ம் ஆண்டு சாட்சியச் சட்டம் எண்.44வது பிரிவு 5வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி.N.கௌரிமாரியம்மாள் கிரேடு 2 பெஞ்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு சத்தியப் பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் – கணேசன் (Pw2 ) | தொழில் |
| த/பெயர் | சமயம் |
| கிராமம் | சாதி |
| தாலுகா | வயது |

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது அருப்புக்கோட்டை நகர சார் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். நீதிமன்றத்தில் இருந்து வந்த அழைப்பாணையின் பேரில் ஆஜராகியுள்ளேன். அழைப்பாணையில் கோரிய ஆவணங்களை கொண்டு வந்துள்ளேன். டிஎஸ் நம்பர் 20/1 முதல் 20/17 வரையான டவுண் சர்வே ரிஜிஸ்டர் உண்மை நகல் **சா.சா.ஆ1**. (அழைப்பாணையில் டிஎஸ் நம்பர் குறிப்பிடாததால் குறியீடு செய்ய பிரதிவாதிகள் தரப்பில் ஆட்சேபணை செய்யப்படுகிறது.) டிஎஸ் நம்பர் 20/1 முதல் 20/17 வரை யார் பெயரில் உள்ளது என்றால் அப்பாஸ் ராவுத்தர் மகன் அப்துல்ரசாக் பெயரில் உள்ளது. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ 28 ஆவணம் எங்கள் அலுவலகத்தால் இணைய வழியில் பதிவேற்றம் செய்யப்பட்டது என்றால் சரிதான். மேற்படி ஆவணம் எந்த தேதியில் பதிவேற்றம் செய்யப்பட்டது என்று எனக்கு தெரியாது. மேற்படி ஆவணத்தில் Remarks என்று குறிப்பிடப்பட்டுள்ளது பற்றி எனக்கு தெரியாது. வா.சா.ஆ 28 ன் படி டிஎஸ் நம்பர் பதிவேற்றம் செய்துள்ளோம். மேற்படி டிஎஸ் நம்பருக்கு சரியான டோர் நம்பரும் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. பழைய கதவு எண் பதிவேற்றம்

செய்யப்பட்டுள்ளது. வா.சா.ஆ 28 ல் கதவு எண். 141 என்று கண்டுள்ளது. ஆனால் அதற்கு சரியான கதவு எண் 14/1 ஆகும். அதே போல் 1 முதல் 17 வரை உள்ள கதவு எண்களுக்கு 14/1 முதல் 14/15 வரை உள்ள எண்கள் தான் சரியானது. மேற்படி டோர் நம்பர்கள், டிஎஸ் நம்பர் எங்கள் ஆவணங்கள் படி நல்லூர், முஸ்லீம் வடக்கு தெருவில் உள்ளது. பள்ளி வாசல் தெரு என்றாலும், நல்லூர், முஸ்லீம் வடக்கு தெரு என்றாலும் ஒன்று தான். இன்றைய தேதியில் மேற்படி கதவு எண்கள் யார் பெயரில் உள்ளது என்பதற்கான ஆவணம் கொண்டு வந்துள்ளேனா என்றால் கொண்டுவந்துள்ளேன். தாவா 2 லக்க சொத்தை பொறுத்து ஆவணங்கள் நான் கொண்டுவரவில்லை. வா.சா.ஆ 29 ஆவணம் எங்கள் அலுவலகத்தால் பதிவேற்றம் செய்யப்பட்ட ஆவணம் என்றால் சரிதான். மேற்படி சொத்திற்கான சரியான வார்டு நம்பர், பிளாக் நம்பர், டிஎஸ் நம்பர் குறிப்பிடும் பட்சத்தில் அதற்கான ஆவணங்களை கொண்டுவரலாம். ( வாதி தரப்பில் சாட்சிக்கு சமர்பிக்கப்பட்டுள்ள ஆவணங்களின் அடிப்படையில் அழைப்பாணையில் கோரிய ஆவணங்களை கொண்டு வருவதற்காக முதல் விசாரணை தொடர்ச்சிக்காக வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது. )

(பிரதிவாதிகள் தரப்பில் சம்மனில் கண்ட ஆவணங்களை தவிர்த்து சாட்சியிடம் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு ஆட்சேபணை தெரிவிக்கப்படுகிறது. )

என்னால் திறந்த நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

சார்பு நீதிபதி,
அருப்புக்கோட்டை.